செய்தி வெளியீடு எண்: 844 நாள்: 16.11.2018

# மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்களிடம் புயல் சேத விபரங்களை இன்று (16.11.2018) தொலைபேசி மூலம் கேட்டறிந்தார்

---

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் இன்று (16.11.2018) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்களிடம் கஜா புயல் குறித்த விவரங்களை தொலைபேசி மூலம் கேட்டறிந்தார்.

கஜா புயல் குறித்து எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், புயலுக்கு பின் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், புயலால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்தும் விரிவாக கேட்டறிந்தார்.

மேலும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய மத்திய அரசு தயாராக உள்ளது என உறுதியளித்தார்.

---

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9